**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்**
**அ.வ.எண். 49/2020**

பெயர் : பிரேமாதேவி
சாட்சி – வா.சா–1 நாள்: 07.11.2025

**குறுக்கு விசாரணை (5ம் பிரதிவாதி தரப்பு)**

**1.** இந்த வழக்கை என்னுடைய இடத்தில், தடத்தில் இடையூறு செய்யக்கூடாது என்று தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கு சொத்தில் தான் வசித்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீட்டிற்கு முன்புறமே தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் பின்புறம் என்னுடைய வீடு தான் உள்ளது. அந்த வீட்டிற்கு செல்வதற்கு கான்கிரீட் ரோடு உள்ளது. அதன் அகலம் 4 அடி என்றால் சரியல்ல. 10 அடி உள்ளது. பின்புறம் உள்ள வீட்டை ஒட்டியவாறு 5ம் பிரதிவாதி ராமசாமி வீடு உள்ளது என்றால் சரிதான்.

2. 5ம் பிரதிவாதியின் வீட்டின் பின்புறம் நடப்பதற்கு 3அடி மட்டுமே உள்ளது என்றால் சரியல்ல. அதன் விஸ்தீரனம் ஒரு சென்ட் ஆகும். அகலம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. 5ம் பிரதிவாதி நான் எனது பின்புற வீட்டிற்கு செல்வதற்கு எந்த காலத்திலும் இடையூறு செய்தது இல்லை என்றால் சரியல்ல. எனக்கும், 5ம் பிரதிவாதிக்கும் தற்போது நல்ல உறவு உள்ளது என்றால் தற்போதும் பிரச்சனை உள்ளது. நான் 5ம் பிரதிவாதியுடன் நட்புறவுடன் இருந்துவிட்டு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**5ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.07 18:20:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பல்லடம்.